DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**O.S. No. 98/2025**

Deposition of Witness : P.W. 4

| | |
|---|---|
| Name - **திரு.முத்துராஜ்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **06.03.2026**

**(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )**

**முதல் விசாரணை –**

1. நான் கூடலூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் வாதி ரஷியழகன் மற்றும் பிரதிவாதி செல்வி ஆகியோர்களை தெரியும். அவர்கள் இருவரும் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் தான். கடந்த 10.10.2024 ஆம் தேதியன்று கூடலூரில் உள்ள மானூத்து மண்டபம் என்ற இடத்தில் நான் இருந்தபோது ரஷியழகன் மற்றும் செல்வி இருவரும் என்னிடம் வந்து ஒரு புரோநோட்டு எழுதி தர வேண்டும் என கேட்டார்கள்.

2. ரஷியழகன் வீட்டுக்குச் சென்று மூன்று புரோநோட்டுகள் எழுதப்பட்டது. மொத்தம் ரூ.30 லட்சம் கடன் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு புரோநோட்டும் தலா ரூ.10 லட்சம் வீதம் எழுதப்பட்டது. ரஷியழகன் ரூ.30 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தார், செல்வி அந்த கடனை வாங்கிக் கொண்டார். என்னிடம் காண்பிக்க கூடிய வா.சா.ஆ.1 மூன்று புரோநோட்டுகளும் என்னால் எழுதப்பட்டவை. புரோ நோட்டுகளில் ஸ்டாம்ப் ஒட்டி அதன் மேல் கையெழுத்தும், கீழும் பிரதிவாதி செல்வி கையெழுத்து போட்டுள்ளார் சாட்சிகளாக சிவப்பாண்டியன் என்பவரும், பாண்டியன் என்பவரும் கையெழுத்து போட்டார்களென்றும், நான் எழுதியதாக சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது அண்ணன் டாக்குமெண்ட் ரைட்டராக உள்ளார், நான் அவருக்கு உதவியாக உள்ளேன். பத்திரம் எழுதுவதற்கு எனக்கு உரிமம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். நான் கூடலூரில் பத்திர அலுவலகத்திற்கு எதிரில் நான் அலுவலகம் போட்டு அங்கு பத்திரம் எழுதி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான், அங்கு வைத்து தான் பத்திரம் எழுதுவேன் என்றால் சரிதான். நான் புரோநோட் மற்றும் பத்திரங்கள் எழுதுவேன் என்றால் சரிதான்.

2. ரஷியழகன் மற்றும் செல்வி இருவரையும் எனக்குத் தெரியும், ரஷியழகன் கோட்டை கருப்புசாமி கோவில் தெரு, ஓடை தெரு என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறார். ஓடைத்தெரு என்பது கூடலூர் 5-வது வார்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். கோட்டை கருப்புசாமி கோவில் தெரு என்பது 4-வது வார்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ரஷியழகன் ரேஸ் மாடுகள் வாங்கி தொழில் செய்து வருகிறார் அதெல்லாம் விவசாயமும் செய்து வருகிறார். ரஷியழகன் த/பெ. ராஜா. அவரது தாயார் பெயர் எனக்கு தெரியாது. அவரது மைத்துனர் முருகனை எனக்குத் தெரியாது.

3. கடந்த 10.10.2024-ம் தேதியன்று கூடலூர் மானூத்து மண்டபம் அருகில் யார், யாருடன் நான் நின்று பேசிக் கொண்டிருந்தேன் என்றால் சாட்சிகளான சிவபாண்டியன், பாண்டியன் மற்றும் நான் ஆகிய மூவரும் நின்று பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் அருகில் வேறு யாரும் அந்த சமயத்தில் இல்லை. மானூத்து மண்டபம் என்ற இடம் எப்பொழுதும் கூட்டமாக இருக்கும் பகுதி என்றால் நாங்கள் அங்கு இருக்கும்போது வேறு யாரும் இல்லை. வேறு யாரையும் பிரதிவாதி சாட்சியாக அழைக்கவில்லை.

4. எனக்கு புரோ நோட்டு எழுத தெரியும் என்பதால் என்னை அழைத்தார்கள் என்றால் சரிதான். எதார்த்தமாக என்னை அழைக்கவில்லை எனக்கு புரோநோட் எழுத தெரியும் என்பதால் அழைத்தார்கள் என்றால் சரிதான். ரூ.30 லட்சம் பணம் கொடுத்ததை நான் பார்த்தேன். பணம் கொடுத்த பிறகு தான்

புரோநோட் எழுதப்பட்டது. புரோநோட் எழுதிய பிறகுதான் பணம் கொடுக்கப்பட்டது. பணம் எண்ணிக் கொடுக்கப்பட்டது. 500 ரூபாய் நோட்டுகளாக 60 கட்டுகள் மொத்தம் ரூ.30 லட்சம் பணம் கொடுக்கப்பட்டது. முதலில் புரோநோட்டில் செல்வி கையெழுத்து போட்டார். செல்வி ஒவ்வொரு புரோநாட்டிலும் இரண்டு கையெழுத்து போட்டுக் கொடுத்தார். ஸ்டாம்ப் மீது ஒன்றும் அதற்கு கீழ் ஒன்றும் போட்டார். இரண்டாவதாக கையெழுத்து போட்டவர் சிவபாண்டியன். மூன்றாவதாக பாண்டியன் என்பவர் கையெழுத்து போட்டார். நான் எழுதிய சாட்சியாக நான்காவது கையெழுத்து போட்டேன். பணம் பெற்ற பிறகு புரோநோட் கையெழுத்து போடப்பட்டது. புரோநோட் தவிர வேறு எந்த ஆவணங்களும் வாங்கவில்லை. நான் இந்த வழக்குக்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.06 15:21:43 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.